நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விவசாயத்துக்கு ஊக்கம் அளிக்கும் மானியங்கள்**

First Published : 23 Feb 2010 12:54:31 AM IST

காஞ்சிபுரம், பிப். 22 : காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொழிற்சாலைகளால் முடங்கிவரும் விவசாயத்தை ஊக்குவிக்க விவசாய பொருள்களுக்கு மானியம் வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை வேளாண் துறை மேற்கொண்டு வருகிறது.

÷இம் மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் உள்ளிட்ட பகுதிகளில் தொழிற்சாலைகள் பெருகியுள்ளதால், வெளி மாநிலங்களில் இருந்தும், வெளிமாவட்டங்களில் இருந்தும் ஏராளமானோர் இங்கு வந்து தங்கி பணிக்குச் செல்கின்றனர். ரியல் எஸ்டேட் தொழிலும் அதிகளவில் நடைபெறுகிறது.

÷விவசாயத்தில் போதிய லாபம் கிடைக்காததால் மனச்சோர்வுக்கு ஆளாகும் விவசாயிகளில் சிலர், தங்கள் நிலங்களை ரியல் எஸ்டேட் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. இன்னும் சிலர், காலியிடங்களிலும், விவசாய நிலங்களில் வீடு கட்டி, அதை 4 அல்லது 5 இளைஞர்கள் சேர்ந்து தங்கும்படி வாடகைக்கு விட்டு ஆதாயம் ஈட்டி வருகின்றனர்.

÷இதனால், ஆண்டுதோறும் விவசாய சாகுபடி நிலம் கணிசமாகக் குறைந்து வருகிறது. கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னர் 1,45,966 ஹெக்டேரில் நெற்பயிரும், 28,766 ஹெக்டேரில் மணிலாவும், 7586 ஹெக்டேரில் கரும்பும் பயிரிடப்பட்டன. ஆனால், இவையனைத்தும் தற்போது கணிசமாகக் குறைந்து விட்டன.

÷இதையடுத்து, விவசாயத்தை ஊக்குவிக்க வேளாண் துறை சார்பில் பல்வேறு தீவிர நடவடிக்கைளை எடுத்துவருகிறது. மண் பரிசோதனைக் கூடத்தில் ரூ.10-க்கு மண் பரிசோதனை செய்யப்படுகிறது. அந்த மண்ணில் எந்த சத்து குறைவாக உள்ளது; அதற்கு ஏற்றார்போல உரங்கள் அளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

÷இம் முறையைப் பயன்படுத்தி விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு விளைப்பொருள்கள் கூடுதலாக கிடைக்கும். மேலும், பல்வேறு விவசாய பொருள்களுக்கு மானிய உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

÷இதுகுறித்து ஸ்ரீபெரும்புதூர் வேளாண்மை உதவி இயக்குநர் கோ. கலைமணி கூறியது:

÷தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பல்வேறு இடுபொருள்களுக்கு 50 சதவீதம் வரை மானியம் வழங்குகிறோம். எண்ணெய் வித்து மற்றும் பயறு வகை பயிர்களில் உற்பத்தியை பெருக்கும் நோக்கில் துல்லிய பாசனம் முறையில் நீர்பாசனம் செய்ய தேவையான சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசன கருவிகள் 50 சதவீதம் மானியத்தில் விநியோகம் செய்கிறோம்.

÷மேலும், மணிலா மற்றும் பயறு வகை பயிர்களுக்கு விளைச்சலை பெருக்க டி.ஏ.பி. கராசல் மற்றும் நுண்ணூட்டச்சத்து தெளிக்க தேவையான இடுபொருள்கள் மற்றும் ஜிப்சம் 50 சதவீதம் மானியத்தில் வழங்குகிறோம்.

÷இவற்றை  வேளாண் விரிவாக்க மையம் மூலம் விநியோகம் செய்து வருகிறோம். துவரை சாகுபடி செய்ய விவாசயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.20 ஆயிரம் மானியம் வழங்குகிறோம்.

÷துல்லியபாசனம் அமைக்க ரூ.15 ஆயிரமும், இதர இடுபொருள்கள் வழங்க ரூ.5 ஆயிரமும் வழங்குகிறோம். விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி செய்ய மார்க்கர் மற்றும் கோனோமீட்டர் கருவிகள் முழு மானியமாக வழங்குகிறோம்.

நெல் பயிருக்கு தேவையான உரம் 50 சதவீதம் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்றார்.

÷விவசாய நிலங்கள் குறைந்து வரும் வேலையில், விவசாய பொருள்களின் விளைப்பொருள்களுக்கு மானிய உதவிகள் வழங்குவது விவசாயத்தைப் பாதுகாக்க உதவும். இருப்பினும், இதுகுறித்து விவசாயிகளிடம் நேரடியாக விளக்கிக் கூறி, நவீன விவசாய யுக்திகளை அவர்களிடம் புகுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்றனர் சமூக ஆர்வலர்கள்.

### தாலுகா வாரியாக 100 விவசாயிகளுக்கு விவசாய இயந்திரம் பயன்படுத்த பயிற்சி

First Published : 23 Feb 2010 08:08:24 AM IST

திருப்பூர், பிப்.22: ஒவ்வொரு தாலுகாவிலும் சுமார் 100 விவசாயிகளுக்கு விவசாய இயந்திரங்களை பயன்படுத்துவது குறித்த பயிற்சி அளிக்க, விவசாய தொழிலாளர் நல வாரியம் சார்பில் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என, வாரியத் தலைவர் கே.பி.ராமலிங்கம் தெரிவித்தார்.

திருப்பூரில் செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை அவர் கூறியது:
விவசாயத் தொழிலாளர்கள் நலவாரியத்தில், 5 ஏக்கர் புஞ்சை அல்லது 2.5 ஏக்கர் நஞ் சை நிலமுடைய விவசாயிகளும், விவசாயக் கூலித் தொழிலாளர்களும் உறுப்பினர்களா க சேர்க்கப்பட்டு வருகின்றனர். இவ்வாரிய உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு திருமண உதவித் தொகையாக மகள்களுக்கு ரூ.5 ஆயிரமும், மகன்களுக்கு ரூ.3 ஆயிரம் வழ ங்கப்படுகிறது. இயற்கை மரணம் என்றால் ரூ.12,500-மும், விபத்தில் மரணமடைந் தால் ரூ.1 லட்சமும், ஒரு கை அல்லது கால் இழந்தால் ரூ.25 ஆயிரமும், 2 கை அல்லது கால்களை இழந்தால் ரூ.50 ஆயிரமும் வழங்கப்படுகிறது. அதனடிப்படையில், தற்போது தமிழகத்தில் 25.69 லட்சம் குடும்பத்தைச் சேர்ந்த 1.73 கோடி பேர் வாரிய உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். அதில், இந்த 3 ஆண்டுகளில் 4.98 லட்சம் பயனாளிகளுக்கு ரூ.401.41 கோடி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் மட்டும் 1.48 லட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 2.90 லட்சம் பேர் வாரிய உறுப்பினர்களாக்கப்பட்டுள்ளனர். அதில், 5,156 பயனிகளுக்கு 3.56 லட்சம் உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த உதவிகளைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் பெருமளவில் வாரிய உறுப்பினர்களாக சேர்ந்து வருகின்றனர்.
விவசாயத் துறை இயந்திரமயமாகி வருவதையடுத்து அனைத்து தாலுகாவிலும் சுமார் 100 விவசாயிகளுக்கு இயந்திரங்களை பயன்படுத்தும் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டு ள்ளது. இத் திட்டத்தை செயல்படுத்த வாரியம் சார்பில் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அரசின் ஒப்புதலை அடுத்து இப்பயிற்சி அளிக்கப்படும் என்றார்.
இணைத் தலைவர் கு.செல்லமுத்து, மாவட்ட ஆட்சியர் சி.சமயமூர்த்தி, மாவட்ட வருவாய் அதிகாரி கே.வி.முரளிதரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### பவானிசாகர் நீர்மட்டம்

First Published : 23 Feb 2010 08:03:33 AM IST

ஈரோடு, பிப்.22: பவானிசாகர் அணையின் நீர்மட்டம், திங்கள்கிழமை 82.10 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 877 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. அணையிலிருந்து ஆற்றில் விநாடிக்கு 600 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. பாசன வாய்க்காலில் தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டுள்ளது. அணை நீர் இருப்பு 16.82 டிஎம்சி.

**இந்தியத் தேயிலைக்கு துபையில் கிராக்கி**

First Published : 23 Feb 2010 12:00:00 AM IST

துபை, பிப். 22: இந்திய தேயிலைக்கு துபையில் தொடர்ந்து கிராக்கி நிலவுகிறது. இந்தியாவிலிருந்து தேயிலை அதிகம் இறக்குமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் துபை இரண்டாவது இடத்தில் உள்ளது.

இது குறித்து துபை தேயிலை வணிக நிறுவனம் மேலும் கூறியிருப்பது:

துபை மக்கள் அதிகம் விரும்பும் தேயிலையில் இலங்கைக்கு அடுத்தபடியாக இந்திய தேயிலை உள்ளது.

இலங்கை, இந்தியா, கென்யா ஆகிய நாடுகளில் இருந்துதான் துபைக்கு அதிக அளவில் தேயிலை இறக்குமதி செய்யப்படுகிறது. மொத்த இறக்குமதியில் இந்த நாடுகளின் பங்களிப்பு 65 சதவீதமாக உள்ளது.

எங்கள் நிறுவனம் மூலம் சாதனை அளவாக 2009-ம் ஆண்டில் 75 லட்சம் கிலோ தேயிலையை விற்பனை செய்துள்ளோம். இந்திய தேயிலை ஒரு கிலோ சுமார் ரூ. 150-க்கு ஏலம் போனது. இது கடந்த ஆண்டு விலையை விட 12.4 சதவீதம் அதிகமாகும்.

**இளம் மாணவர்களுக்கான தேசிய விருது கிராமத்து விஞ்ஞானிகள்**

நுனி நாக்கு ஆங்கிலம், நவீன நாகரிகத்தின் சாயல் எதுவுமின்றி "மதுரை அச்சம்பத்து பகுதியில் ஆட்டோக்களால் ஏற்படும் பாதிப்பு குறித்து' ஆய்வு செய்த "வேர்கள்' அமைப்பு மாணவர்கள் தேசிய விருது பெற்று உள்ளனர். "வேர்கள்' அமைப்பின் மூலம் அச்சம்பத்து பகுதி மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பித்தல், அறிவியலை எளிமையாக எடுத்துக் கூறி ஆர்வத்தைத் தூண்டுதல், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு என மாணவர்களை பண்படுத்தி வருகிறார் பேராசிரியர் பாலகிருஷ்ணன்.

ஆய்வு குறித்து பேராசிரியர் பாலகிருஷ்ணன் கூறியதாவது: அறிவியல் துறையில் ஆய்வு செய்வதற்காக குஜராத்தில் உள்ள தேசிய குழந்தைகள் அறிவியல் காங்கிரஸ், இளம் மாணவர்களுக்கு (10 - 17 வயது) தேசிய விருது வழங்கி வருகிறது. தமிழ்நாடு அறிவியல் இயக்கத் தின் "துளிர்கள்' அமைப்பின் மூலம் விண்ணப் பித்தோம். இந்தாண்டுக் கான "சுற்றுச்சூழலில் மனிதனின் தாக்கம்' தலைப்பின் கீழ், அச்சம்பத்து பகுதியில் ஆட்டோக்களால் ஏற்படும் பிரச்னைகளை ஆய்வு செய்ய மாணவர்களை தூண்டினேன் என்கிறார்.

மாணவர்கள் மதிவாணன், நவநீதகிருஷ்ணன், பாலமுருகன், சதீஷ்குமார், அணித்தலைவி நவீனா கூறியதாவது: அச்சம்பத்து ரோட்டின் முன்பாக, துணை ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. இப்பகுதியில் ஒருநாளைக்கு அதிகபட்சமாக 90 முறை லக்கேஜ் ஆட்டோக்கள் செல்கின்றன. ஆட்டோ வரும் போது 80 - 120 டெசிபல் அளவுக்கு இரைச்சல், ஹாரன் சத்தம் ஏற்படுத்துவதால், நரம்பு தளர்ச்சி, கோப உணர்ச்சி, செவிட்டுத் தன்மை ஏற்படும் வாய்ப்புள்ளது. வீட்டுக் கதவு, ஜன்னல், ரோட்டில் தூசி படியும் விகிதத்தை கணக்கில் எடுத்தோம். தூசியால் தலையில் பொடுகு, இருமல், ஆஸ்துமா ஏற்படுகிறது. ஒரு நாளைக்கு 90 ஆட்டோக்களில் 720 பேர் பயணம் செல்கின்றனர். ஒரு பஸ்சில் அதிகபட்சமாக 60 பேர் வீதம் 12 பஸ்களை இயக்கினால் போதும். புகை, இரைச்சல், தூசி போன்ற சுற்றுச்சூழல் மாசு பெருமளவு குறைந்துவிடும். உடல்நலமும் பாதிக்கப்படாது. முக்கியமாக போக்குவரத்து நெருக்கடி

குறையும். நான்கு மாத ஆய்வை சமர்ப்பித் தோம். தெற்காசியாவிலிருந்து பெறப்பட்ட 600 ஆய்வுகளில் ஒன்றாக தேர்ந்தெடுக்கப்பட்டதால் இளம் விஞ்ஞானி பட்டம் பெற்றோம். விருதுபெற்ற பின், குஜராத் முதல்வர் நரேந்திரமோடியுடன் டீ அருந்தினோம். ஆய்வுக் கான செலவுகளுக்கு "வேர்கள்' அமைப்பின் மூலம் பேராசிரியர் பாலகிருஷ்ணன் உதவினார், என்கின்றனர் இம்மாணவர்கள்.

### ஆனைமலை கொப்பரை ஒரு கிலோ 31.50 ரூபாய்

பொள்ளாச்சி : ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்தில் ஒரு கிலோ கொப்பரைக்கு அதிகபட்சமாக 31.50 ரூபாய் விலை கிடைத்தது.ஆனைமலை சுற்றுப்பகுதி விவசாயிகள் 22 பேர் 31 மூட்டை கொப்பரையை ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கொண்டு வந்தனர். கொப்பரையை இரண்டு வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) சந்திரசேகர் ஏலம் நடத்தினார்.முதல் தர கொப்பரை 22 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 28 ரூபாய் முதல் அதிகபட்சமாக 31.50 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 9 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 16 ரூபாய் முதல் அதிகபட்சமாக 24 ரூபாய் வரை விலை கிடைத்தது.அதிகாரிகள் கூறுகையில், "கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது கொப்பரை வரத்து அதே நிலையில் உள்ளது. வெளிமார்க்கெட்டில் கொப்பரைக்கு அதிகபட்சமாக 34 ரூபாய் விலை கிடைப்பதால், ஏலத்திலும் அதிக விலை கிடைக்கவில்லை. கடந்த வாரத்தை விட கொப்பரை கிலோவுக்கு 1.25 பைசா விலை சரிந்துள்ளது. ஆனால், அதிக ஈரப்பதமுள்ள முதல்தர கொப்பரை வரத்து அதிகளவில் இருந்தது.இரண்டாம் கொப்பரையின் விலை கடந்த வாரத்தை விட இந்த வாரம் இரண்டு ரூபாய் சரிந்தது. வரும் வாரத்தில், விலை உயர வாய்ப்புள்ளது' என்றனர்.

### பூச்சிக்கொல்லி பயன்படுத்தி மீன்பிடிப்பவர்களுக்கு எச்சரிக்கை

வால்பாறை : ஆறுகளில் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தி மீன்களை பிடிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று வனத்துறை எச்சரித்துள்ளது.மானாம்பள்ளி வனச்சரக அலுவலர் ஆரோக்கியராஜ்சேவியர் வெளியிட்டுள்ள அறிக்கை:வால்பாறையை சுற்றியுள்ள எஸ்டேட் பகுதிகளில் சிலர் மீன்களை தோட்டாக்களை பயன்படுத்தியும், துத்துநாகம் விஷக்கொல்லி மருந்தை பயன்படுத்தியும் மீன்களை பிடித்து விற்பனை செய்வதாகவும் புகார் வந்துள்ளது. இது போன்ற செயல்களில் ஈடுபடுவதால், விஷம் கலந்த குடிநீரை குடிக்கும் மக்களுக்கு பல்வேறு நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளன.எனவே, இது போன்ற செயல்களில் ஈடுபடுவர்களை பொதுமக்கள் கண்டறிந்து வனத்துறையினருக்கு தகவல் கொடுத்தால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

### புகையிலைக்குள் வாழை ஊடுபயிர் 'டபுள்' வருமானத்துக்கு விவசாயிகள் 'ஐடியா'

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் புகையிலை வயலுக்குள் வாழை ஊடுபயிராக நடவு செய்து, இரட்டிப்பு வருமானத்துக்கு விவசாயிகள் வழி ஏற்படுத்தியுள்ளனர். சத்தியமங்கலம் பகுதி விவசாயத்தை அடிப்படையாக கொண்டது. இங்கு வசிக்கும் மக்கள் விவசாயம் மற்றும் அதை சார்ந்த தொழிலையே நம்பியுள்ளனர். பொதுவாக விவசாய நிலத்தில் கரும்பு, வாழை, மஞ்சள் உள்ளிட்ட ஆண்டு பயிரை மட்டுமே விவசாயிகள் பயிர்செய்து வந்தனர். சில சமயங்களில் நெற்பயிர் நடவு செய்வர். இதுபோன்ற ஆண்டு பயிர்களை பயிர் செய்யும்போது அவர்களுக்கு வருமானமும் ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே கிடைக்கும் சூழல் ஏற்படுகிறது. இதனால் விவசாயிகள் செலவுக்கு கடன் பெறவேண்டிய நிலை ஏற்படுகிறது. இதைமாற்ற விவசாயிகள் குறுகிய கால பயிருக்கு மாற தொடங்கினர். குச்சிக்கிழங்கு, செண்டுமல்லி மற்றும் புகையிலை போன்ற குறுகிய கால பயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

தற்போது ஒரே போகத்தில் இரட்டிப்பு வருமானம் எடுக்க ஊடுபயிர் முறையை புகுத்தியுள்ளனர். குறிப்பாக புகையிலை வயலில் வாழை ஊடுபயிராக நடவு செய்துள்ளனர். புகையிலை அதிகபட்சம் நடப்பட்ட நாளில் இருந்து 110 நாளில் அறுவடைக்கு வந்துவிடும். ஆனால், வாழை ஓராண்டு கழித்து பயன் தரும். புகையிலை வயலுக்குள் வாழையை ஊடுபயிராக நடவு செய்தால் புகையிலை வருமானம் எந்த அளவிலும் குறைவதில்லை. வாழை பெரிதாகி நிழல் வரும் சமயத்துக்குள் புகையிலை அறுவடை செய்யப்படுகிறது. இந்த ஊடுபயிர் நடைமுறை மூலம் வாழையை தனியாக நடவு செய்தால் ஏற்படும் காலத்தில் நான்கு மாதங்கள் மீதமாகிறது. ஆகவே சத்தியமங்கலம் பகுதி விவசாயிகள் தற்போது ஊடுபயிர் விவசாயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர்.

### மரவள்ளி பயிருக்கு காப்பீடு தோட்டக்கலைத்துறை அறிவிப்பு

கரூர்: மரவள்ளி பயிருக்கு மார்ச் 30ம் தேதிக்குள் காப்பீடு செய்துகொள்ள தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் உள்ளதாவது: மத்திய அரசு நிறுவனமான இந்திய வேளாண்மை காப்பீட்டு நிறுவனம் மூலம் தேசிய வேளாண்மை காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் மூலம் அனைத்து விதமான உணவுப்பயிர் மற்றும் வருடாந்திர வணிக தோட்டக்கலை பயிர்கள் காப்பீடு செய்யப்படுகிறது. அனைத்து விதமான இயற்கை சீற்றங்களால் ஏற்படும் மகசூல் இழப்புகளுக்கு இத்திட்டம் காப்பீடு வழங்குகிறது.

தேர்வு செய்யப்பட்டு அறிக்கை செய்யப்பட்ட குறுவட்டம் அல்லது தாலுகாவை சேர்ந்த அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம். அரசு உடமையாக்கப்பட்ட வங்கிகளிலோ அல்லது கூட்டுறவு வங்கிகளிலோ கடனுதவி பெற்ற விவசாயிகள் தாங்கள் பெற்ற கடன் தொகைக்கு ஏற்ப பயிர்காப்பீடு செய்யலாம். குத்தகைதாரர்களும் இத்திட்டத்தில் பயன்பெறலாம். புயல், மழை, வெள்ளம், நிலச்சரிவு, வறட்சி, இடிமின்னல்,இயற்கை தீ போன்ற இயற்கை சீற்றங்களால் பயிர்களுக்கு ஏற்படும் சேதத்தினால் விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்து சராசரி மகசூல் 150 சதவீதம் மதிப்பு வரை காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பயிருக்கும் வரையறுக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குறிப்பிட்ட பருவத்துக்கு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தாந்தோணி வட்டாரத்தில் 2009-10ம் ஆண்டு ராபி பருவத்தில் வெள்ளியணை குறுவட்டத்தைச்சேர்ந்த மரவள்ளி பயிர் சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம். திட்டத்தின் கீழ் கடந்த 2009 அக்டோபர் முதல் தேதி முதல் வரும் 28ம் தேதி முடிய மரவள்ளி சாகுபடி செய்துள்ள அனைத்து விவசாயிகளும் தாங்கள் காப்பீடு செய்ய விரும்பும் தொகையில் 4.45 சதவீதம் தொகையை காப்பீடு கட்டணமாக செலுத்தி பதிவு செய்து கொள்ளலாம். தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் மூலம் பயிர்காப்பீட்டுத் கட்டணத்தை செலுத்த முன்வரும் விவசாயிகளுக்கு மாநில அரசால் காப்பீட்டுக் கட்டணத்தில் 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பங்களை பதிவு செய்து மரவள்ளி பயிரினை காப்பீடு செய்து கொள்ள விரும்பும் வெள்ளியனை குறுவட்ட விவசாயிகள் வரும் மார்ச் 30ம் தேதிக்குள் பயிர்காப்பீட்டு கட்டணத்தை மானிய உதவியுடன் கட்டி பயிர்காப்பீடு செய்து பயனடையலாம். இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

### நிலக்கடலை பயிருக்கு ரூ. 30 லட்சம் மானிய நிதி

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நிலக்கடலை பயிருக்கு ஜிப்சம் இட தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 30 லட்ச ரூபாய் மானியமாக வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) முகமது அலி வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 1,600 ஹெக்டேரில் றவை பட்டத்தில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஒன்றரை மாத பயிரான நிலக்கடலையில்

காய்கள் அதிக எடையுடையதாகவும், திரட்சியாகவும், எண்ணெய் சத்து மிகுந்ததாகவும் கிடைப்பதற்கு நிலக்கடலை பயிருக்கு ஜிப்சம் இடுவது மிகவும் அவசியமானதாகும்.

ஜிப்சத்தில் சுண்ணாம்பு சத்து 24 சதம், கந்தக சத்து 18 சதம் உள்ளது. சுண்ணாம்புசத்து காய்கள் திரட்சியாகவும், அதிக எடையுள்ளதாகவும் உருவாக உதவுகிறது. கந்தக சத்து நிலக்கடலையில் எண்ணெய் சதவீதத்தை அதிகரிக்க உதவுகிறது. நிலக்கடலைபயிரில் ஜிப்சத்தை அடியுரமாக ஹெக்டேருக்கு 200 கிலோ இட வேண்டும். நிலக்கடலையில் காய்கள் உருவாகும் தருணமான விதைத்த 40 நாட்களில் ஹெக்டேருக்கு 200 கிலோ ஜிப்சம் இட்டு மண் அனைத்தல் மிகவும் அவசியமாகும்.

செடிகளை சுற்றி ஜிப்சம் இடும் போது நிலத்தில் போதிய ஈரம் இருக்க வேண்டும். சுண்ணாம்பு சத்துள்ள நிலங்களில் ஜிப்சம் இடுவதை தவிர்க்க வேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார வேளாண் விரிவாக மையங்களிலும் ஜிப்சம் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஹெக்டேருக்கு 400 கிலோ வீதம் ஜிப்சம் இட வேண்டும் என்ற நிலையில் இதன் முழு விலையான 1,231 ரூபாயில் மானியமாக 750 ரூபாய் வழங்கப்படுகிறது.மானிய விலையில் விவசாயிகளுக்கு ஜிப்சம் வழங்க தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி மாவட்டத்துக்கு 30 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## உர விலையை அதிகரித்தால் பாதிக்கும் : விவசாயிகள் கடும் எதிர்ப்பு

மதுரை: உரம் விலை அதிகரிப்புக்கு விவசாயிகளிடையே கடும் எதிர்ப்பு உள்ளது. சமீபகாலமாக உரம் விலை அதிகரிக்கப் போவதாகவும், மத்திய அரசு இதற்கான முடிவுகளை மேற்கொள்ள உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின்றன. முதல்அமைச்சர் கருணாநிதி, மத்திய அமைச்சர் மு.க.அழகிரி, உரவிலையை அதிகரிக்கக் கூடாது என மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகின்றனர். யூரியா உரவிலை 10 சதவீதம் அதிகரிக்கும் என தெரிகிறது. கடந்த பலஆண்டுகளாக உரம்விலை அதிகரிக்கவில்லை. இனி உர நிறுவனங்களே விலையை நிர்ணயித்துக் கொள்ளலாம் என, அறிவிப்பு வெளியாகும் என தகவல்கள் பரவியுள்ளன. உரத்தின் விலை அதிகரித்தாலும், விளை பொருட்களுக்கு கட்டுப்படியாகும் விலை கிடைக்காது. இடைத் தரகர்களால் விவசாயிகள் பாதிக்கப்படுவர். எனவே உர விலையை உயர்த்தக் கூடாது என எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

நம்நாட்டின் உரத் தேவைக்கு நாம் வெளிநாடுகளை சார்ந்துஇருக்கும் நிலை உள்ளது. நம்நாட்டிலேயே உர நிறுவனங்கள் இருந்தாலும், மூலப்பொருட்களை வெளிநாட்டில் இருந்துதான் பெற வேண்டியுள்ளது. இதற்கான விலை அதிகம். அதனால் நேரடியாக உரமாகவே இறக்குமதி செய்து, அரசு மானியத்துடன் வினியோகம் செய்யப்படுகிறது. இதனால் சர்வதேச அளவில், டாலரின் விலை ஏற்றம், வீழ்ச்சிக்கு ஏற்ப, தங்கம், ஷேர் மார்க்கெட் போல, உரத்தின் விலையும் தினமும் ஏற்ற, இறக்கத்துடன் உள்ளது. இதுகுறித்து விசாரித்தபோது, உரவிலை உயர்வால் விவசாயிகளே பாதிப்பர். அவர்களின் விளைபொருளுக்கு கட்டுப்படியாகும் விலையை கிடைக்கச் செய்தால் உரவிலை உயர்வு பிரச்னையில்லை. இதற்கு நெல், கரும்பை போல, விவசாயிகளின் அனைத்து பொருட்களையும் அரசே கொள்முதல் மையம் அமைத்து பெற வேண்டும் . உரவிலையை உயர்த்தும் முன், விவசாயிகளின் கருத்தறிந்து நிர்ணயிக்க வேண்டும். இல்லையெனில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவர். ஏற்கனவே வறட்சியால் பாதிப்பு உள்பட பல பாதிப்பில் இருக்கும் விவசாயிகள் மேலும் பாதிக்கப்படுவர் என்கின்றனர். மதுரை மாவட்ட விவசாயிகள் சங்க தலைவர் எம்.பாண்டியன்: கடந்த 1990 ல் யூரியா மூடை ஒன்றுக்கு 121.50 ரூபாயாக இருந்தது. இன்று 251.11 ரூபாயாக உள்ளது. இதுபோல அனைத்து உரமும் உயர்ந்துள்ளது. 1994ல் நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது, உரமானியம் தொடரும்.

நீண்டகால உரக்கொள்கையை உருவாக்குவோம் என்றார். ஆனால் விலை அதிகரித்துள்ளது. தீவிர உணவு உற்பத்தி செய்தும் பலனில்லை. இதனால் வரும்காலங்களில் ரசாயன உரத்தை பயன்படுத்தாமல், ராகி, சோளம் என பயிரிட வேண்டியதுதான். உரஆலை முதலாளிகளுக்கு ஒரு லட்சம் கோடி ரூபாய் கடன்நிலுவை உள்ளது. அவர்கள் கடன்பெற வங்கிக் கதவு திறந்திருக்கிறது. ஆனால் வறட்சி, புயல், மழை, வெள்ளம் என இயற்கை இடர்பாடுகளை தாங்கி, உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகளை இந்த உரவிலை அதிகரிப்பு பாதிக்கும். இதனால் உணவு உற்பத்தியும் பாதிக்கும் என்றார்.மதுரை தெற்கு தாலுகா விவசாயிகள் சங்க தலைவர் எஸ்.பாண்டியன்:மத்திய அரசின் முடிவு கண்டிக்கத் தக்கது. உரத்தின் விலையை கூட்டினால், விளைபொருட்களின் விலையையும் அதிகரிக்க வேண்டும். இல்லையெனில் உரமானியத்தை விவசாயிகளுக்கே நேரடியாக
தரவேண்டும். ஒரு ஏக்கருக்கு இவ்வளவு என நிர்ணயித்து, மானிய தொகையை கூட்டுறவு சங்கம் மூலம் தரலாம். விவசாயத்தில் ஏற்கனவே தொழிலாளர் பிரச்னை உள்ளது. உரவிலை உயர்வு விவசாயிகளை பாதிக்கும். எனவே இது விவசாய விரோத கொள்கை என்றே கூற வேண்டும் என்றார்.

மதுரை மாவட்ட உர விற்பனையாளர் சங்க செயற்குழு உறுப்பினர் எஸ். நாகசங்கர்: பாக்டம்பாஸ், காம்ப்ளக்ஸ், டி.ஏ.பி., என அனைத்து உரங்களிலும் குறிப்பிட்ட சதவீதத்தில் யூரியா கலந்துள்ளது. இதனால் (50 கி) மூடைக்கு 30 ரூபாய் வரை விலை கூடினால், டன்னுக்கு மற்ற கூலியெல்லாம் சேர்த்து 500 ரூபாய் வரை அதிகரிக்கும். இது விவசாயத்தை கடுமையாக பாதிக்கும். பெட்ரோல், டீசல் போல ஒவ்வொரு ஆண்டும் 4, 5 ரூபாய் என அதிகரித்து இருந்தால் பிரச்னையில்லை. ஆனால் 15 ஆண்டுகளாக இல்லாமல், தற்போது உயர்த்தினால் அதிக பாதிப்பு இருக்கும். தற்போது உரவிலை டன்னுக்கு 4760ம், அவற்றை விற்பனை செய்ய கொண்டு வரும் போக்குவரத்து, ஏற்று, இறக்கு கூலி என சேர்ந்து 5 ஆயிரம் ரூபாயையும் தாண்டி விடுகிறது. இந்த போக்குவரத்து செலவை அரசு நிர்ணயிக்கும் விலையிலேயே சேர்த்தால், எம்.ஆர்.பி., ரேட்டில் விற்க முடியும். இல்லையெனில் கூடுதல் விலைக்கு விற்பதை தவிர்ப்பது சிரமம் என்றார். ஏற்கனவே உழவன் கணக்கு பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது என்ற நிலை உள்ளது. தற்போது உரவிலையும் உயர்ந்தால், உழவர்களின் பாடு திண்டாட்டம் தான்.

**விவசாயிகள்குறைதீர்நாள் கூட்டம்**

நாகை:நாகை கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நாளை (24ம் தேதி) காலை 11 மணிக்கு மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது. இதில் மாவட்ட விவசாயிகள் மற்றும் விவசாய பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை தெரிவித்து பயன்பெறலாம். இத்தகவலை கலெக்டர் (பொ) அண்ணாதுரை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**பயறு வகை பயிரில் உற்பத்தியை அதிகரிக்க வேளாண் அதிகாரி யோசனை**

வேதாரண்யம்:வேதாரண்யம் பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட பயறு வகை பயிர்களின் உற்பத்தியை பெருக்குவதற்கான வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு தலைஞாயிறு வட்டார வேளாண் உதவி இயக்குனர் சந்திரகாசன் யோசனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பயறு வகை பயிர்களின் உற்பத்தியை பெருக்க இலை வழி ஊட்டமாக டி.ஏ.பி. கரைசல் தெளிக்க ஒரு ஹெக்டேருக்கு 12.5. கிலோ வீதம் இரண்டு முறை தெளிக்க 25 கிலோ எக்டேருக்கு 200 ரூபாய் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 4 கிலோ டி.ஏ.பி. உரத்தை 10 லிட்டர் தண்ணீரில் முதல் நாள் இரவு கரைத்து ஊறவைக்க வேண்டும்.

மறுநாள் தெளிந்த கரைசலை மட்டும் வடிகட்டி அத்துடன் 190 லிட்டர் தண்ணீரை சேர்த்து 20 முதல் 25ம் நாள் மற்றும் 30 முதல் 35ம் நாள் பூக்கும் தருணத்தில் உள்ள பயறு வகைகளுக்கு இரண்டு தடவை இலை வழி உரமாக மாலை நேரத்தில் கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்

**காளான் வளர்ப்பு பயிற்சி முகாம்**

பெரம்பலூர் : பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உயிர் தொழில்நுட்பவியல் துறையின் சார்பில் காளான் வளர்ப்பு- மண்புழு உரம் தயாரித்தல் குறித்த பயிற்சி முகாம் நடந்தது.முகாமில் புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூரில் உள்ள காளான் மற்றும் விதைப்பண்ணை உரிமையாளர் வெங்கடேசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு காளான் விதை உற்பத்தியில் திசு வளர்ப்பு முறையில் உயிர் வித்து தயாரித்தல், தாய்வித்து மற்றும் படுக்கை வித்து தயாரித்தல் முறை, காளான் வளர்ப்பு, காளானின் மருத்துவ குணங்கள் ஆகியவை குறித்து மாணவிகளுக்கு எடுத்துரைத்தார்.

மேலும் மண்புழு உரம் தயாரித்தல், அதற்கேற்ற தட்ப வெப்ப நிலை, அதில் அடங்கியுள்ள சத்துக்கள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் அனுஷா வாழ்த்தி பேசினார். முன்னதாக பிருந்தாஅலெக்ஸ்ஹேமா வரவேற்றார். நிஷா நன்றி கூறினார். முகாமில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இளங்கலை மற்றும் முதுகலை மாணவிகள் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். இவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

**நெல்லுக்கு மத்திய அரசின் கூடுதல் விலையை அறிவிக்காத திமுக அரசுக்கு அதிமுக கண்டனம்**

தஞ்சாவூர்: நெல்லுக்கு மத்திய அரசு அறிவித்த கூடுதல் விலையை அறிவிக்காத திமுக அரசை கண்டித்து அதிமுக தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. தஞ்சை தெற்கு மாவட்ட ஜெயலலிதா பேரவை சார்பில் 62வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு ஆலோசனைக் கூட்டம் தஞ்சையில் நடந்தது. ஜெயலலிதா பேரவை மாவட்டத் தலைவர் விருத்தாசலம் தலைமை வகித்தார். நகர செயலாளர் சுப்பு வரவேற்றார். இணை செயலாளர்கள் ராஜமனோகரன், புஷ்பநாதன், துணைச் செயலாளர்கள் ஆசைதம்பி, முத்துக்குமார், பொருளாளர் துரை, துணைத் தலைவர் பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அதிமுக விவசாய பிரிவு மாநிலத் தலைவர் துரை. கோவிந்தராஜன், மாவட்டச் செயலாளர் வைத்திலிங்கம், ஒன்றியச் செயலாளர் துரை.வீரண்ணன், பாடநூல் கழக முன்னாள் தலைவர் தங்கமுத்து, எம்.எல்.ஏ. வீரகபிலன், வாரிய முன்னாள் தலைவர் திருஞானம், முன்னாள் எம்.எல்.ஏ. ராஜேந்திரன் ஆகியோர் பேசினர். ஜெயலலிதாவின் 62வது பிறந்த நாளை தெற்கு மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடுவது. கரும்பு விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று டன்னுக்கு ரூபாய் 2 ஆயிரத்து 500 விலை நிர்ணயம் செய்ய கோரி விழுப்புரத்தில் ஆர்பாட்டம் நடத்திய ஜெ.க்கு நன்றி தெரிவிப்பது.

தஞ்சை மாவட்ட விவசாயிகள் நெல்லுக்கு கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை என்றும், விலை உயர்வு கேட்டு தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றனர். மத்திய அரசு நெல்லுக்கு குவிண்டாலுக்கு இந்த ஆண்டு உயர்த்திக் கொடுத்த ரூபாய் 150ஐ திமுக அரசும் தர வேண்டும் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
நகரச் செயலாளர் பண்டரிநாதன், மாவட்ட நிர்வாகிகள் காந்தி, சேகர், கோபால், ராஜமாணிக்கம், ஒன்றிய செயலாளர்கள் சக்திவேல், ராமச்சந்திரன், சந்திரசேகரன், செல்வநாயகம், பாலு,ராஜேந்திரன், முத்துராமன், நகர நிர்வாகிகள் ராஜேஸ்வரன், பேரூராட்சி செயலாளர்கள் தனராஜ், புகழேந்தி, முருகையன், வீரையன், ராஜேந்திரன், ராமமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர். ஒன்றிய செயலாளர் பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

## தென்னையில் கோகோ ஊடுபயிர் சாகுபடி தொழில் நுட்ப பயிற்சி அளிப்பு

பட்டுக்கோட்டை: தென்னையில் கோகோ ஊடுபயிர் பற்றிய ஒருநாள் பயற்சி வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில், வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண் பல்கலை மற்றும் முந்திரி மற்றும் கோக்கோ அபிவிருத்தி இயக்கம் அமைச்சகம் கொச்சியும் இணைந்து பயிற்சியை நடத்தினர். பட்டுக்கோட்டை, மதுக்கூர், பேராவூரணி, சேதுபவாசத்திரம், திருவோணம் மற்றும் ஒரத்தநாடு பகுதிகளை சேர்ந்த 150க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிற்சியில் கலந்து கொண்டனர். வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் பேராசிரியர் வைத்திலிங்கம் வரவேற்றார். தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் ஆடுதுறை இயக்குனர் ஜெயராஜ் தலைமைவகித்து குத்துவிளக்கேற்றி கோகோ பயிர் சாகுபடியின் எதிர்காலமும் அதன் வணிக ரீதியான சந்தை வாய்ப்புகள் பற்றி பேசியதாவது: கோக்கோ உலக அளவில் முக்கிய பணப்பயிராகும். இது தென் அமெரிக்காவில் அமேசான் பகுதியை தாயகமாக கொண்டது. உலக அளவில் 5.6 மில்லியன் விவசாயிகள் கோக்கோ விவசாயத்தையே சார்ந்துள்ளனர். கோக்கோ உற்பத்தி மூன்று மில்லியன் டாலர்களாக கணக்கிடப்பட்டுள்ளது. இதன் வளர்ச்சி ஆண்டுக்கு மூன்று சதவீதம், அதன் மொத்த மதிப்பு 5.1 மில்லியன் அமெரிக்க டாலராகும். கடந்த 2009ம் ஆண்டு மட்டும் கோக்கோ உற்பத்தி 3.54 மில்லியன் டன்களாக கணக்கிடப்பட்டுள்ளது. கோக்கோ வளரும் நாடுகளில் அதிக அளவு உற்பத்தி செய்யப்பட்ட போதும், வளர்ந்த நாடுகளிலேயே அதிக அளவு பயன்படுத்தப்பட்டு வருகிறது. கோக்கோவில் புரதம்18.5 சதவீதமும், கொழுப்பு 21.7 சதமும், கார்போஹைட்ரேட் 11.5 சதவீதமும் அடங்கியுள்ளது.

அதேபோல், தென்னையில் பல பயன்பாடுகள் இருந்தாலும், அதன் நிலையற்ற விலையால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். பெரும்பாலும் நடுத்தர விவசாயிகள் தென்னை தொழிலையே நம்பியுள்ளதால் அவர்களின் வருமானத்தை பெருக்க பல ஆண்டு பயிராக இருக்கும் தென்னையின் இரு மரங்களுக்கு இடையில் அதிக இடைவெளி இருப்பதாலும், போதிய வெளிச்சம் கிடைப்பதாலும் தென்னந்தோப்புகளில் பல வகையான ஊடுபயிர்களை வளர்க்க முடியும். குறிப்பாக 20 ஆண்டுகளுக்கும் மேலான தென்னந்தோப்புகளில் செய்யப்படும் இந்த ஊடுபயிர் நீண்ட காலத்துக்கு பின்பற்றக்கூடிய நிரந்தரமானதாகும். சராசரியாக ஒரு எக்டேருக்கு 450 மரங்கள் கொண்டு வளரும்போது 450ல் இருந்து ஆயிரத்து 150 கிலோ மகசூல் கிடைக்கும். தற்போது இதற்குரிய விலை கிலோ 160 ரூபாய் என்ற அளவில் உள்ளது. எதிர்காலத்தில் தேவை அதிகரிக்கும் போது இதன் விலை பல மடங்கு உயரும் என்பதில் சந்தேகமில்லை. மூன்று ஆண்டுகளுக்கு பின் 45 ஆயிரம் ரூபாய் முதல் ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் வரை கூடுதல் வருமானம் பெற வாய்ப்புள்ளதால், நிரந்தரமற்ற தென்னை விலையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோக்கோ ஊடுபயிர் மூலம் நிரந்தர லாபம் பெறலாம். இவ்வாறு அவர் பேசினார். ஆழியார் தென்னை ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ராஜமாணிக்கம், பேராசிரியர்கள் சுப்பிரமணியம், மோகன்தாஸ், காட்பரீஸ் நிறுவனத்தை சேர்ந்த தொழில்நுட்ப வல்லுனர் ஜோசப் ராஜேஸ் ஆகியோர் கோக்கோ ஊடுபயிரின் பல்வேறு பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கி கூறினர். ஸ்டீபன்ராஜ் நன்றி கூறினார்.

## வெற்றிலை விலை வீழ்ச்சி : கொடி விவசாயிகள் கவலை

தேவதானப்பட்டி: வெற்றிலை விலை வீழ்ச்சி அடைந்ததால், பெரியகுளம் பகுதி வெற்றிலைக் கொடி விவசாயிகள் கவலையில் உள்ளனர். தேனி மாவட்டம் பெரியகுளம், ஜெயமங்கலம், மேல்மங்கலம், வடுகபட்டி, சில்வார்பட்டி, நல்லகருப்பன்பட்டி, பெரியகுளம் கீழவடகரை, தெய்வேந்திரபுரம், தாமரைக்குளம் மற்றும் போடி, சின்னமனூர் பகுதியில் அதிக அளவில் வெற்றிலைக் கொடி பயிரிடப்படுகிறது. இப்பகுதியில் விளையும் வெற்றிலை, மதுரை, ராஜபாளையம், கோவில்பட்டி, ராம்நாடு, திண்டுக்கல், கொடைக்கானல் மற்றும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. ஒரு ஏக்கர் பரப்பளவில் வெற்றிலைக் கொடி நடவு செய்து பயிர் விளைச்சல் எடுப்பதற்கு இரண்டு லட்சம் ரூபாய் வரை செலவாகிறது. பயிர் செய்து பத்து மாதங்களுக்குப் பிறகு தான் பலன் கிடைக்கும். நோய்

தாக்குதல் இல்லாமல் இருந்தால், மூன்று ஆண்டுகளுக்கு இதன் பலனை அனுபவிக்கலாம். நோய் தாக்குதல், போதிய அளவு விலை இல்லாத காரணத்தால் சில ஆண்டுகளாக வெற்றிலைக் கொடி பயிரிடும் நிலத்தின் பரப்பளவு வெகுவாக குறைந்துள்ளது.

விலை வீழ்ச்சி: நான்கு மாதத்திற்கு முன்பு கருப்பு வெற்றிலை கிலோ 60 ரூபாய், இளசு வெற்றிலை 90 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. கடந்த சில மாதங்களாக திருச்சி, கரூர், ஆத்தூர் பகுதியில் இருந்து அதிக அளவில வெற்றிலை வருவதால் விலை வெகுவாய் குறைந்துள்ளது. தற்போது கருப்பு வெற்றிலை 25 ரூபாய், இளசு வெற்றிலை 60 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வெற்றிலை விலை குறைந்து வருவதால் வெற்றிலைக் கொடி பயிரிட்டுள்ள விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

சில்வார்பட்டி விவசாயி பாலசுப்பிரமணி கூறுகையில்,"" ஏற்கனவே பாதிக்கப்பட்ட வெற்றிலைக் கொடி விவசாயக் குடும்பத்தினர், பிழைப்பிற்காக திருப்பூர் சென்று விட்டனர். வெற்றிலை விலை வீழ்ச்சி பொருளாதார நஷ்டம் ஏற்பட்டு சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த விலை வீழ்ச்சியால், இன்னும் பல குடும்பங்கள் வேலை தேடி வெளியூர் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது," என்றார்.

### மானிய விலையில் பயிர் பாதுகாப்பு கருவிகள்

தேனி: மானிய விலையில் பயிர் பாதுகாப்பு கருவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் விசைத்தெளிப்பான் மற்றும் கைத்தெளிப் பான்கள் விவசாயிகளுக்கு வழங்க தயார் நிலையில் உள்ளன. தேனி வேளாண் உதவி இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது: ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தி திட்டம், ஐசோபார்ம் எண்ணெய் வித்து, பயறு வகை திட் டத்தின் கீழ் விசைத்தெளிப்பான் மற்றும் கைத்தெளிப்பான்கள் தேவையான அளவு இருப்பு வைக்கப் பட்டுள்ளன. தேனி விவசாயத்துறை உதவி இயக்குனர் அலுவலகத்தில் இதை விவசாயிகள் மானிய விலையில் பெற்றுக் கொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ் 6,136 ரூபாய் மதிப்புள்ள விசைத்தெளிப்பானுக்கு இரண்டாயிரம் ரூபாய் மானியமும், 1,850 ரூபாய் மதிப்புள்ள கைத்தெளிப்பானுக்கு 800 ரூபாயும் மானியமாக வழங்கப்படும். தேசிய விவசாய வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஜிப்சம் மானிய விலையில் வழங்கப்படும்," என்றார்.

### நெல்லை தேயிலை விற்பனை கடைகளில்மாநகராட்சி அதிகாரிகள் சோதனை

திருநெல்வேலி:நெல்லையில் தேயிலை விற்பனை கடைகள், குடோன்களில் மாநகராட்சி அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தினர்.தமிழகம் முழுவதும் கலப்படம் செய்யப்பட்ட தேயிலை விற்கப்படுவதாக "தினமலரில்' செய்தி வெளியானது. இதையடுத்து சென்னை பொது சுகாதாரத்துறை இயக்குனர் டாக்டர் இளங்கோ, உணவு கலப்பட தடைச்சட்ட இணை இயக்குனர் டாக்டர் கண்ணன் உத்தரவின் பேரில் தமிழகம் முழுவதும் தேயிலை விற்பனை நிலையங்கள், மொத்த தேயிலை விற்பனை குடோன்களில் நேற்று ஒரே நாளில் சோதனை நடத்தப்பட்டது. நெல்லையில் மாநகராட்சி கமிஷனர் பாஸ்கரன் உத்தரவுப்படி சுகாதார அதிகாரி கலு.சிவலிங்கம் தலைமையில் உணவு ஆய்வாளர்கள் ஏ.ஆர்.சங்கரலிங்கம், காளிமுத்து, சுகாதார ஆய்வாளர் அரசகுமார் உள்ளிட்ட அதிகாரிகள் நெல்லை ஜங்ஷன், டவுன் பகுதிகளில் தேயிலை விற்பனை கடைகள், குடோன்களில் திடீர் சோதனை நடத்தினர். அப்போது அங்கு வைக்கப்பட்டிருந்த தேயிலை உதிரிகள், தேயிலை பாக்கெட்டுகளை உணவு மாதிரியாக எடுத்து பகுப்பாய்விற்கு அனுப்பினர். தேயிலையில் கலப்படம் செய்து விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மாநகராட்சி அதிகாரிகள் எச்சரித்தனர்.

மாவட்டம் முழுவதும் சுகாதாரப்பணிகள் துணை இயக்குனர் மீரான் மைதீன் தலைமையில் சுகாதார ஆய்வாளர்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள தேயிலை விற்பனை மையங்களில் திடீர் சோதனை நடத்தி, தேயிலைகளை உணவு மாதிரியாக எடுத்து சென்னைக்கு ஆய்வுக்கு அனுப்பினர்.

### விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

போளூர்:போளூரில், விவசாயிகளுக்கு நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது.போளூர் தாலுகா அளவிலான விவசாயிகளுக்கு, நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி முகாம் போளூர் தாலுகா அலுவலகத்தில் நடந்தது. மாவட்ட வழங்கல் அலுவலர் தரணிபதி தலைமை வகித்தார். தாசில்தார் செல்வரசு, டி.எஸ்.ஓ., பாரி ஆகியோர் முன்னிலை வகித்து பேசினர். நுகர்வோர் மன்ற அலுவலர் கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார்.

நுகர்வோர் பாதுகாப்பு சங்க மாவட்ட தலைவர் சாமிநாதன், வேளாண்மை அலுவலர் ராம்மோகன் ஆகியோர், நுகர்வோரின் பிரச்னைகள் குறித்து விளக்கி பேசினர்.தி.மலை உழவர் பயிற்சி நிலைய உதவி இயக்குனர் வடமலை பேசுகையில், "விவசாயிகள் தாங்கள் வாங்கும் பொருட்களில் எப்படி எல்லாம் ஏமாற்றப்படுகிறார்கள் என்றும், தரமற்ற பொருட்களை கண்டறிவது எப்படி என்பது குறித்தும், விவசாயிகள் விழிப்புணர்வுடன் இருப்பதன் அவசியம் குறித்தும் கிராமங்கள்தோறும் நுகர்வோர் மன்றங்கள் துவக்கப்படுவதன் அவசியம் குறித்தும் விளக்கி பேசினார்.இக்கூட்டத்தில் போளூர், சேத்துப்பட்டு, கலசப்பாக்கம், வந்தவாசி, தெள்ளாறு ஆகிய பகுதிகளை சேர்ந்த 50க்கும் அதிகமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### உடுமலையில் பருத்தி கொள்முதல் விலை உயர்வதால் விவசாயிகள் குஷி

உடுமலை : கிராக்கி அதிகரித்து உள்ளூரிலேயே பருத்தி கொள்முதல் தீ விரமடைந்துள்ளது. விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.உடுமலை, குடிமங்கலம் பகுதியில் பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசனத்திற்கு பருத்தி பயிரிடப்பட்டது. அறுவடை துவங்கிய போது பருத்தி கிலோவுக்கு 40 ரூபாய் விலை கிடைத்து வந்தது. வெளிமார்க்கெட்டில் விலை இருந்தாலும், உள்ளூர் கொள்முதல் அதிகளவு துவங்கவில்லை.இதனால், பல விவசாயிகள் பருத்தியை இருப்பு வைத்திருந்தனர். அறுவடை சீசனையொட்டி பருத்தி கொள்முதலை மில்நிர்வாகங்கள் குறைத்ததால் கடந்த வாரம் பருத்தியின் விலை சரிந்தது. ஒழுங்கு முறை விற்பனை கூடம் மற்றும் வெளிமார்க்கெட்டிலும் விலை குறைந்ததால் விவசாயிகள் கவலையடைந்திருந்தனர்.

இந்நிலையில், ஒரு வாரமாக பருத்தியின் விலை அதிகரித்து வருகிறது. மிக நீண்ட இழை பருத்தி வரத்து மாநில அளவில் குறைந்ததால், மில் நிர்வாகத்தினர் நேரடியாக கிராமங்களில் இந்த ரக பருத்தியை கொள்முதல் செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். கிராக்கி அதிகரித்து விலை உயர்ந்து வருகிறது.வெளியிடங்களுக்கு பருத்தியை விற்பனைக்கு எடுத்து செல்வது தவிர்க்கப்பட்டுள்ளதால் விவசாயிகளுக்கு போக்குவரத்து மற்றும் இதர செலவுகள் குறைந்துள்ளது.தற்போது ஒரு கிலோ பருத்தி 44 முதல் 46 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகிறது. கடந்தாண்டு மிக நீண்ட இழை பருத்தி ரகம் அதிகபட்சமாக 40 ரூபாய்க்கு விற்றது. இந்தாண்டு உள்ளூர் கொள்முலில் 46 ரூபாய் வரை விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். விவசாயிகள் கூறியதாவது: சாகுபடி செலவு அதிகரிப்பு போன்ற பிரச்னைகளால் பருத்தி கிலோவுக்கு 50 ரூபாய் கிடைத்தால் மட்டுமே நல்ல லாபம் கிடைக்கும். நிரந்தர விலை கிடைத்தால் பருத்தி சாகுபடி பரப்பு வருச சீசனில் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. அறுவடை சீசனில் பருத்திக்கு செயற்கையாக விலை சரிவு ஏற்படுத்தப்படாமல் இருக்க மத்திய, மாநில அரசுகள் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

## நவீன தொழில் நுட்பம் மூலம் விவசாயத்துறை மேம்படுத்தப்படும் மத்திய மந்திரி தாமஸ் பேச்சு

கொழிஞ்சாம்பாறை,

பிப்.23–

நவீன தொழில்நுட்பம் மூலம் விவசாயத்துறை மேம்படுத்தப்படும் என்று மத்திய விவசாய மந்திரி தாமஸ் கூறினார்.

தொடக்க விழா

கேரள மாநிலம், பாலக்காடு மாவட்டம், பெருமாட்டி பஞ்சாயத்தில் கம்பாளத்தரையில் விவசாயிகளுக்காக 'அக்ரோ பிராசஸ்' என்ற மையம் அமைக்கப்பட்டு இருந்தது. இங்கு விவசாய விரிவு திட்ட தொடக்க விழா நடைபெற்றது. விழாவுக்கு அச்சுதன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். விழாவில் மத்திய மந்திரி தாமஸ் கலந்து கொண்டு விவசாய விரிவு திட்டத்தை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

விவசாயத்துறை மேம்பாடு

நாடு முழுவதும் உணவு தட்டுப்பாட்டை தவிர்க்க விவசாயிகள் பாடுபட்டு வருகிறார்கள். விவசாயிகள் நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி அதிக அளவு மகசூல் பெற வேண்டும். இதற்காக நவீன தொழில் நுட்பம் விவசாயத்துறையில் புகுத்தப்பட்டு அது மேம்படுத்தப்படும்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட செடி, பயிர்களை விவசாயிகள் 50 ஆண்டு காலத்திற்கு பயன்படுத்தக்கூடாது என்று கோரிக்கை விடுத்து உள்ளனர். ஆனால் இதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். இப்போது கூட கடந்த 15 ஆண்டுகள் காலமாக மரபணு மாற்றம் விவசாயம் நடந்து கொண்டு தானே வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில், முன்னாள் எம்.எல்.ஏ.எழுத்தாணி கிருஷ்ணன் குட்டி, மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர் முருகதாஸ், பெருமாட்டி பஞ்சாயத்து தலைவர் ரிஷ், வட்டார பஞ்சாயத்து உதவித்தலைவர் செந்தாமரை ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.

## நாட்டின் கோதுமை உற்பத்தி 8.20 கோடி டன்னாக உயரும் கையிருப்பு மூன்று மடங்கு அதிகரிப்பு

பிரபா ஜெகன்னாதன்

புதுடெல்லி

நடப்பு 2009–10–ஆம் ஆண்டு வேளாண் பருவத்தில் நாட்டின் கோதுமை உற்பத்தி, வரலாறு காணாத அளவிற்கு 8.20 கோடி டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. குஜராத் மாநிலத்தில் தற்போது கோதுமை அறுவடை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் மகாராஷ்டிரா உள்ளிட்ட பல மாநிலங்களில் விரைவில் அறுவடைப் பணிகள் தொடங்க உள்ளன.

முந்தைய மதிப்பீடுகள்

இவ்வாண்டு பிப்ரவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டை விட இது 17 லட்சம் டன் அதிகமாகும். மேலும் அமெரிக்க தானிய கவுன்சிலின் மதிப்பீட்டையும் விட இது 15 லட்சம் டன் அதிகமாக உள்ளது. சென்ற 2008–09–ஆம் ஆண்டு பருவத்தில் நாட்டின் கோதுமை உற்பத்தி 8.07 கோடி டன்னாக இருந்தது.

இந்நிலையில் மத்திய அரசின் கோதுமை கையிருப்பு என்றுமில்லாத அளவிற்கு உயர்ந்து காணப்படுகிறது. அதிகரித்து வரும் கையிருப்பை நிர்வகிப்பது அரசுக்கு ஒரு சவாலாக உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். நடப்பு நிதி ஆண்டின் தொடக்கத்தில் மத்திய அரசிடம் 2.30 கோடி டன் கோதுமை கையிருப்பில் இருந்தது. இது, விதிமுறைகளின் படி கையிருப்பில் இருக்க வேண்டிய அளவான 82 லட்சம் டன்னைக் காட்டிலும் மூன்று மடங்கு

அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டில் ஆண்டுக்கு சுமார் 7.60 கோடி டன் கோதுமை பயன்படுத்தப்பட்டு வருகிறது. கோதுமை உற்பத்தி அதிகரிக்க உள்ள நிலையில், கையிருப்பும் பன்மடங்கு உயர்ந்துள்ளதால் கோதுமை விலை சரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விலை குறைகிறது

இந்தியா தற்சமயம் கோதுமையை இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் இல்லாததால் சர்வதேச சந்தையிலும் கோதுமை விலை குறையத் தொடங்கியுள்ளது. தென்னிந்திய ஆலைகள், மார்ச் மாதத்தில் டெலிவரி செய்து கொள்ளும் வகையில் ஆஸ்திரேலியாவிடமிருந்து இறக்குமதி ஒப்பந்தங்கள் எதையும் மேற்கொள்ளவில்லை.

உலகில், கோதுமை ஏற்றுமதியில் ரஷியா, பிரான்ஸ், உக்ரைன் மற்றும் கனடா ஆகிய நாடுகள் முன்னிலை வகித்து வருகின்றன. ஏற்கனவே விலை சரிவடைந்துள்ள நிலையில், இந்த நாடுகள் இறக்குமதியாளர்களுக்கு தள்ளுபடி சலுகைகள் வழங்கியும் வருகின்றன. இந்நிலையில் கோதுமை விலை மேலும் குறையும் என வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

சர்வதேச சந்தையில் விலை கடுமையாக சரிவடைந்துள்ளதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி தென்னிந்தியாவில் உள்ள பல ஆலைகள் ஆஸ்திரேலியாவில் இருந்து ஒரு டன் கோதுமை 285 டாலர் (ரூ.13,110) என்ற விலையில் வாங்கி வைத்துள்ளதாக தெரிகிறது. தென்னிந்திய துறைமுகங்களுக்கு வரும் கோதுமை, குஜராத் மாநிலத்தின் கோதுமைக் காட்டிலும் டன்னுக்கு ரூ.500 குறைவாக இருப்பதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

## வேளாண் பல்கலைக்கழகத்தில் இன்று நூற்புழுவியல் கருத்தரங்கு

கோவை, பிப்.23–

கோவை வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் புதுடெல்லியில் உள்ள இந்திய நூற்புழுவியல் கழகம் சார்பில் 'நீடித்த வேளாண்மைக்கு நூற்புழுவியல் ஆராய்ச்சியில் புதிய வழிமுறைகள்' என்ற தலைப்பிலான 3–நாள் கருத்தரங்கு தொடக்கவிழா இன்று (செவ்வாய்க்கிழமை) நடக்கிறது. கருத்தரங்கை வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி தொடங்கி வைக்கிறார். புதுடெல்லியில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி குழுமத்தின் பயிர்பாதுகாப்பு உதவி இயக்குனர் ராஜேந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசுகிறார். இந்த கருத்தரங்கில் பயிர்நூற்புழுக்களின் பல்லுயிராக்கம், உயிர்வாழ் சூழலியல் மற்றும் கட்டுப்பாடு முறைகள் குறித்து ஆராய்ச்சியாளர்கள் கட்டுரை சமர்ப்பிக்கின்றனர். இந்த கருத்தரங்கில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து சுமார் 150–க்கும் மேற்பட்ட நூற்புழுவியல் விஞ்ஞானிகள் கலந்து கொள்கின்றனர்.

இந்த தகவலை வேளாண்பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அலுவலர் ரவிகுமார் தியோடர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

## கடும் வறட்சி காரணமாக தேயிலை செடிகள் பாதிக்கும் அபாயம்

குன்னூர், பிப்.23–

கோடைகாலம் தொடங்கி உள்ளதால் தேயிலை செடிகள் வறட்சியால் பாதிக்கப் படும் அபாயம் உள்ளது.

சிறு தேயிலை விவசாயிகள்

குன்னூர் சுற்றுப்பகுதிகளில் தேயிலை விவசாயம் தான் முக்கிய விவசாயமாக உள்ளது. நீரூற்று பகுதிகள் குறைவாக இருப்பதால் தேயிலை சாகு படியை அதிக அளவு சிறு தேயிலை விவசாயிகள் மேற் கொண்டு உள்ளனர்.

தேயிலை பயிர் மலை சரி வான பகுதியில் வளரும் தோட்ட பயிராக உள்ளது. அதிக அளவு மழை தண்ணீர் தேங்கினால் தேயிலை செடி களின் வேர்கள் அழுகி விடும். இதன் காரணமாகவே மலை பாங்கான பகுதியில் தேயிலை சாகுபடி மேற்கொள்ளப்படு கிறது.

கோடை காலம்

அதே போன்று அதிக வெயிலும் தேயிலை செடி களுக்கு தேவைப்படாது. இதனால் தேயிலை தோட்டங் களில்

தேயிலை செடிகளுக்கு இடையில் நிழல் தரும் மரங்கள் வளர்க்கப்படுகின்றன.

இந்த ஆண்டு வழக்கத்திற்கு முன்னதாகவே கோடை காலம் தொடங்கி வெயில் பகல் வேளையில் கடுமையாக இருக்கிறது. வெயிலின் காரண மாக தேயிலை செடிகளின் இலைகளின் துவாரங்கள் வழி யாக அதிக அளவு நீராவி வெளியேறுகிறது.

உறைபனி

இதன் காரணமாக தேயிலை செடிகளில் மகசூல் பாதிக்கப் படும் அபாயம் நிலவி வருகிறது. உறைபனியின் தாக்குதல், வறட்சியின் தாக்குதல் இவற் றால் தேயிலை கொழுந்துகள் தரமின்றி, நீர் சத்து இன்றி உள்ளது.

தேயிலை கொழுந்துகளில் நீர் சத்து குறைவாக இருப்ப தால் தோட்டத்தில் இருந்து பறிக்கப்படும் பச்சை தேயிலை கொழுந்துகளின் எடை குறை வாக உள்ளது. எடை குறைவு காரணமாக சிறு தேயிலை விவசாயிகள் வருமான குறைவினால் அவதியுற்று வருகின்றனர்.

சிவப்பு சிலந்தி நோய்

தற்போது கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து உள்ளதால் தேயிலை செடிகளில் சிவப்பு சிலந்தி நோய் தாக்குதல் அதிக அளவு இருக்கும் என்று கூறப்படு கிறது.

கோடை வெயிலின் தாக் கத்தை சமாளிக்க சாகுபடி முறைகளை கையாள வேண்டி யது அவசியமாகிறது. உபாசி வேளாண்மை அறிவியல் மையம் பரிந்துரைக்கும் வகை யில் சாகுபடி முறையை கையாள வேண்டும்.

வறட்சி காலமான இந்த தருணத்தில் சொட்டு நீர் பாசனத்தை கையாள்வது இன்றியமையாதது ஆகும்.